850 16 M.58

தமிழ்
மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.

மலர் 1 } ஏப்ரல், 1941 { இதழ் 3

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

காரியக்கமிட்டியார்: சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

தேரர்

பொருட்பண்பு வெண்பா.

கடவுள் வணக்கம்

பூதலத்தை யுண்ட புயல்வண்ணன் மாமருகன்
மீதலத்தை யாளும் விநாயகனுர்—பாதபத்ம
மாகனகத் தையுளத்தில் வைத்து முருகர்பதக்
கோகனகத் தையுளத்திற் கொள். (1)

அவையடக்கம்.

ஆனுலு மென்மே லபசார நீர்பொறுத்து
மேனு ளருள்போல் விதிக்கவே—நானு
வகையான பண்டிதரே வாகடத்தி லுள்ள
மிகையான புத்திசொல்லு வீர். (2)

நாடி வகை.

வளிநாடி (வாதம்) தன்மை.

பொன்னு னதுலோக பூபதியா னுற்போல
எந்நாளு நோய்கட் கிறையாகி—யன்னமாய்
விம்பநடை யாற்கணித வேதாந்த மாநாடி
தம்பநடை யாகும்வா தம். (3)

அழல்நாடி (பித்த) தன்மை.

ஆமாத்தி யற்கு மடங்காத மந்திரியாய்க்
கோமாற்றந் தந்திரிக்குக் கூறியவ—னேமாற்றும்
போது சிவந்து பொழுது கறுப்பிறைக்குத்
தாதுவுமோ தும்மாபித் தம். (4)

ஐ நாடி (சேத்தும) தன்மை.

குண்டலத்தா கண்டலனுர் குஞ்சரம்போ லஞ்சாமல்
மண்டலத்து மன்னனுக்கு மந்திரிக்கு—மிண்டாகி
மெய்யுள்கடை நான்கிலென மீளாப் பிணிகேளாய்ப்
பையுளுயிர் நீக்குங்க பம். (5)

யாக்கை யியல்பு.

மன்னனுக்கு மந்திரிக்கு மன்னுபடை யாளனுக்குந்
தன்னதென வில்லாச்சு தந்திரமா—யுன்னுயிர்ப்பி
ராணியென்பான் ஒத்திடமாய் நன்றுசெயி லொன்றவனேய்க்
காணியக மாமேயாக் கை (6)

மூன்று நாடிகளின் வரிசை.

கைபார்க்க நாடிகளோர் கைபார்க்கும் வாதத்தை
யைபார்க்கும் பித்த மதைப்பார்க்கும்—மைபார்க்குங்
கண்போல் விரல்களுக்குக் கண்டிருந்துங் காணுதாம்
உண்போதத் தாலறிவா யுன். (7)

முந்நாடிகளின் நாழிகை.

காலமுதற் பத்து கடிகை யளவுகொள்முக்
காலமுமன் மந்த்ரிதள கர்த்தனிவர்—காலமெனக்
கொள்ளிதிலே யன்னோர் குணங்குறிநா டிப்பெயர்ச்சி
யுள்ளிதிலே வந்துமறி யும். (8)

முந்நாடிக் காலம்.

மன்னனுக்குச் செல்கால மந்திரிக்குத் தற்காலம்
பின்னனுக்கு மேற்காலம் பேதமில்லை—யின்னபடி
யானுலு நாடி யதுவா நாடிடிற்
ருண்மை நோயினர்க்குத் தான். (9)

ஒவ்வொரு நோயிலும் நாடிக் காலம்.

மந்திரிகா லத்தின்முதன் மத்திகடை யப்பானுன்
கிந்தடைவிற் கன்ன விரண்டரையே— தந்திரிக்கு
மன்னனுக்கு மீதே வகுத்ததுகொண் டெஞ்சியதோர்
கன்னல்மற்ற நோய்கள்கடி கை. (10)

நாடி ஐவகை ஓட்டம்.

நாடி நிதானத்தி னன்மையறி பண்டிதரைத்
தேடி லடங்கித் தெரியார்கள்—ஓடுமதில்
மன்னமைச்சு தந்த்ரி வழிபிறழ லொன்றலறல்
பின்னிடல்முன் னுதலஞ்சு பேர். (11)

முதற்பொருள் வகை.

மண் (பிருதிவி.)

வெண்பொடியா கக்கடவ வேதைகளா கக்கடவ
நண்பொருட்கெ லாங்கவச நன்ருகிப்—பெண்பருவச்
சூலுக் கிசைந்து துரத்து மமைச்சனையும்
மாலெச்சி னீயறிகு வாய். (12)

தண்ணீர் (அப்பு.)

மாலுக் குறவாகி மன்னுயிர்க்கு மன்னுயிராய்
மேலுக் கிரண்டாகி வெண்மையாய்க்—கோலுக்குப்
பாவனமாய்ச் சேனு பதிக்குப் பதியாகுஞ்
சீவனமே சீவனமாந் தேர். (13)

எழுநா (நெருப்புதேயு.)

எந்தெந்த லோக விரதபா ஷாணங்கட்
கந்தந்த வாகிருதி யாகுமே—யந்திவண
ராக முறையா யளியா சனியாகு
நாகமென வீழுமெழு நா. (14)

காற்று (வாயு.)

மாதே யருபாய் வழங்குயிரா யீரறிவாய்
மீதே யுருமல் விளங்குமே—யோதுமகி
பட்சணமாய் நோய்களுக்கு பாயசஞ்சீ விப்பொருளாய்
லட்சணமாய் நிற்குமனி லம். (15)

வான் (ஆகாயம்.)

ஒருணர்வா யெல்லா மொடுங்குவதா யாதிமுதல்
சேருவதாய் வாதபித்த சேத்துமமா—யாரோதை
கண்டவர்க்குங் காணுக் கருப்பொருள்போற் காணுமந்தக்
குண்டலத்தை நீயறிந்து கொள். (16)

பொருள் வகை.

வெண்ணிறப்பசுவின்பால்.

பித்தமெனு மந்திரியைப் பேசாம லோட்டுமகா
ரத்தமுதற் காசத்தை நாட்டாது—நித்தியங்
கவளத்தைச் செல்லுவித்துக் காயத்தைக் காக்குந்
தவளப் பசுவின்சு தை. (17)

துளசி.

மன்னனுக்குச் சீரளித்து மற்றவரைத் தாழவைத்துப்
பின்ன மிலாதுடலைப் பேணியே—மன்னுநிலைப்
பேரணியப் பண்ணும் பிணிக்குப் பிணியாகுந்
தாரணியின் மாலலங் கல். (18)

வேங்கை.

பக்குவமா யாறு பதத்தை வதைத்திடலில்
மிக்க பிணியை விரட்டியுப்—புக்கல்
மணியிரத லோக வகைகளைப்பங் திக்குங்
கணியதனை நன்றாய்க் கணி. (19)

கோன்றை.

பாண்டரங்கர் பூணும்ப் பறக்கடித்து மேகத்தை
யாண்டரங்கக் கைக்குள்வச மாக்குமே—காண்டற்
குதவிசில செய்துடலை யோம்புமது நீபார்
இதழியெனுங் கொன்றைபுவி யில். (20)

புளி.

வேந்தனுக்கே சார்பாகி மேலிருவர்க் கும்பயனுய்ச்
சேந்தனுக்குக் காணியிடஞ் செய்யுமே—சாந்தமிலாப்
பாம்பாக வாகம் பருவரலெய் தப்புரியும்
ஆம்பிர நோய்க்காகா வாம். (21)

ஆல்.

அச்சரம் புண்கிரந்தி ஆவதும்ப யந்தோட
அச்சமுற மேகமுந்தீ யாகுமே—இச்சகத்தில்
நாதனென மூவருக்கு நற்றுணையா மாக்கைக்கும்
பூத மதிபதியைப் போல். (22)

அரிதகி.

மன்னவனை மந்திரியை மாறும லாட்கொண்டு
பின்னவனை யுங்கடிது பேர்க்குமே—மன்னி
யரிதகிக்கு மாபோ லரணியத்தை மீறி
யரிதகிநோய் கட்கிகலே யாம். (23)

அசோகு.

வாதபித்த சேத்ம வரிசைபெறு மூவருக்கும்
ஆதரவாய் மெய்யி லமருமே—பூதலத்தில்
வீண்பிண்டி போல விடுமுடம்பை யுந்தணிக்கும்
காண்பிண்டி யாமசோ கம். (24)

எருக்கு.

மன்னனையுங் கையெடுக்க வைத்தெயிற்றி னேயகற்றி
யுன்னு பிணிப்பனியை யோட்டுதலாற்—சொன்னேன்
எருக்கெனவே பூமி யினிலே விளங்கும்
அருக்க மருக்கனென லாம். (25)

சம்பீரம். (எலுமிச்சை)

மந்திரிக்கு மந்திரியாய் மன்னனுக்கு மன்னனெனத்
தந்திரிக்கு மித்திரன்போற் சாருமே—முந்தவரு
கெம்பீர மாய்ச்சரக்கின் கெண்ணியமாய் வாகடர்க்குச்
சம்பீர மாமெலுமிச் சை (26)

ஏரண்டம்.

வாதத் தொடக்கை வரவொட்டா மற்படிக்குக்
காதத்துக் கப்பாற் கடியுமே—சூதத்தைப்
பேரண்டப் பந்திக்கும் பேதிக்கு நோய்க்காட்டை
யேரண்ட மென்பதினி யே. (27)

ஆடுதீண்டாப்பாளை.

கிரந்திகரப் பான்வெக்கை கேசநலி மாந்தை
யரந்தை வினையை யறுக்குந்—துரந்து
பிரியொணு நோய்களையும் பின்முன்பா ராமல்
மறியுணு மூலியடை வாய். (28)

மெருகங்கிழங்கு.

அரச னமைச்ச னதிகாரி சேனைக்
கரச னிவர்க்கிகலே யாகிப்—பொருவும்
மிருகமெனு நாயைமுயல் மேல்விடுதல் போல
வெருகடியை யேவுவினை மேல். (29)

கணை.

ஈளை யிரும விரைப்புப் புசபிணிகள்
மாள வொழியாமல் வாட்டுமே—யாளுமுறை
பாங்கா யறிந்துசெய்வீர் பண்டிதத்தைப் பண்டிதரே
வேங்கைவாய்ப் பானகணை மெய். (30)

சிவனார் வேம்பு.

குட்டஞ் சிரங்கு குறைப்புப் புசமாந்தை
கட்டப் பிணிகள் கழலுமே—திட்டம்
உரனிம்பங் காயத்துக் குண்டாகு மேலே
அரனிம்ப மென்னுமருந் தால். (31)

வேம்பு.

புந்தியினைத் தீட்டுவிக்கும் புன்பிணியை யோட்டுவிக்கு
மிந்தியத்தை நன்று யிசைவிக்குஞ்—சந்ததமும்
வீறுண்டாங் கற்ப மிகவுண்டா மெஞ்ஞான்று
மாறன்று ரையமில்லா மல். (32)

ஆகாசத்தாமரை.

வேண்டினு லுண்டாம் வியாதியில்லாப் பேரின்பம்
பூண்ட தினகரனைப் போலவே—மீண்டுமினி
யான விரத மனைத்தும் வலுவிக்கும்
வானவம்பு சத்தைமிக வை. (33)

ஓரிதழ்த்தாமரை.

சுரத்தைக் கடிந்து சுவாசத்தைப் போக்கி
யுரத்தை யுடலுக் குதவும்—பருத்தவுடல்
வாடா தனுதினமும் வைத்தடிக்கு மேகத்தை
யேடேக கோகனக மே. (34)

வர்னனை.

வாதகுரு வாயுடம்பு வாதமறுத் தப்படியே
வேதையுலோ கங்களிலே வேண்டினுற்—பாத
விரதமுதற் கையாட லென்று விசையும்
வரனனையை நீமனதில் வை. (35)

தேள்கடை.

வங்கத்தி னீர்வாங்கும் வாத குருவாகுந்
தங்கத்தைக் காண்பிக்குந் தப்பாது—ளங்க
மரிச்சு விடாமல் வளர்க்குமெந் நாளும்
விருச்சிகக் கூலமிது மெய். (36)

மரிசம்.

மூவருக்கு முன்னிகலாய் முன்னுறவாய் மற்றபிணி
யாவருக்கு மேலா யிருக்குமே—தேவருக்கும்
எண்ணப்ப தார்த்த மெனமும்மூர்த் திக்கிரிகை
தண்ணப்பிர தாபமரி சம். (37)

முல்லை.

மருந்தெவ் விதமேனு மாறு ததற்குத்
திருந்து முபதையெல்லாஞ் செய்யும்—பொருந்துமகி
மேன்மிகுவே கங்கொடுக்கும் வெம்பிணியைச் சாடுதலால்
மான்மனையே பண்டிதர்க்கு வாள். (38)

வில்வம்.

உண்டிக் கனுகரண முற்றதுணை கொற்றவற்குத்
தண்டிக்க வல்ல சமர்த்தென்ன—வெண்டிக்கும்
மேலார் பதார்த்தமென மேதினியெல் லாந்துலங்கு
மாலூ ரளித்தபெரு மை. (39)

வேல்.

பல்லுக் கடுத்த பலநோ யகற்றியதைக்
கல்லுக்கு நேராகக் காட்டுமே—மல்லுக்கு
நண்மின்வினை காளெனப்போய் நாளும் வியாதிகளைச்
சண்மயில வன்னுயு தம். (40)

வாளம்.

எந்த வியாதி யினங்களையுஞ் சாடிமல
பந்த வினையைப் பரிகரித்து—வந்தவெப்பைப்
பாபியென மாட்டுதலால் பாடாண வெம்மையினுஞ்
சோபிமகா சோபியென்று சொல். (41)

அறுகு.

போகாத தோடவினை போகப் பிணியகன்று
தேகாதி யெல்லாஞ் செழிக்கவே—வாகாய்
அடர்தந்தை பிள்ளைக் கணியா தலினல்
திடமாங் கணபதி பத்திரம். (42)

பிடகர்.

மணிமங் திரவவிழ்த மார்க்கந் தெரிந்து
பிணிக ளறிந்தொதுக்கிப் பின்னுங்—தணிய
வுடலை வளர்த்திடலா லுத்தியின னூலால்
பிடகர் வயித்தியர்க்குப் பேர். (43)

காந்தட்கிழங்கு.

தேவி யுரத்தையுமா தேவ பலத்தையுமோ
ராவியெனக் கட்டியுற வாக்குமே—நோவுகளை
யேன்றுகொண்டு மாட்டுமுமை யின்மதலைக் கில்லிடத்தாந்
தோன்றியெனுங் காந்தளடித் தூள். (44)

திப்பிலி.

கட்டியெதிர் நின்று கடுநோயெல் லாம்பணியுந்
திட்டி வினையகலுந் தேகமெத்த—புட்டியாம்
மாமனுக்கு மாமனென மற்றவர்க்கு மற்றவனுங்
காமனெனுந் திப்பிலிக்குக் கை. (45)

சேர்ந்தாரைக்கொல்லி.

அவிழ்த முலோகமும் மாகுநோய் மெய்மை
தவிசங்கண் முன்னுறுதி தானுய்க்—கவிபிணியை
யார்ந்தவுடற் கப்புறமே யாக்கிமிகு பாக்கியமாஞ்
சேர்ந்தாரைக் கொல்லியெனுந் தீ. (46)

வெற்பேந்தி.

எய்த்துநரர் போகாம லிந்தியத்தைப் பந்தித்து
மெய்த்தனுவை வெற்பாக்கு விக்குமே—பொய்த்தவரும்
கற்பாந் தரமாக வீடளிக்கு நம்பினர்க்கு
வெற்பேந்தி மெய்க்குறுதி மெய். (47)

காதணியோம்பி.

கட்டியெதிர் சேவிக்குங் காயசித்தி யுண்டாக்கும்
வெட்டலின்றி லோகமெல்லாம் வேதிக்கு—குட்டமறும்
ஆதரவுண் டாகுமிக வாக்கைக் கனுதினமுங்
காதணியோம் பிக்குவினை கை. (48)

மாக்கல்வம்.

கல்லெனும்பா ஷாணத்தைக் கட்டுவிக்கு மேகத்தைக்
கொல்லு முடலைக் குளிர்விக்கும்—உல்லாசம்
ஆக்கு முயிர்நிலையை யாதரிக்கு மெஞ்ஞான்றும்
மாக்கல்வ மூலி மகிமை. (49)

பல்லியமெழுப்பி.

பித்த முதலான பிணியைக் கருவறுக்குஞ்
சத்தையெனக் கட்டுஞ் சரக்குகளை—வித்தையல
வல்லமையே மன்னனுக்கும் வாய்த்த துணையாகும்
பல்லிய மெழுப்பிதா பம். (50)

தாமரை.

சலதோஷங் காமாலை சத்திவிக்க லான
பலதோஷங் கட்குமிடர் பண்ணுங்—கலையாக்
கபமுரியச் சாடுமிகு காயசித்தி யாக்குந்
தபனனட் பாகுமம்பு சம். (51)

தூதுவேளை.

வேர்ப்புறணி யாலுடற்கு மேன்மை யளித்திடலால்
தாற்பொடியாற் சுக்கிலத்தைத் தம்பித்து—வேர்த்திடமெய்
முந்திடவை யாதரத்தை மூட்டுதலா லெஞ்ஞான்றுந்
தந்தியர சானனமாந் தம். (52)

தும்பை

மீளாக் கபப்பிணியை மேலிட்ட சன்னிகளைத்
தூளாக்கித் தூரத் துரத்தலாற்—கேள்நசியக்
கைமுறையா னீரைக் கழற்றலாற் காய்ந்திடலால்
ஐமுகனுர் வெற்றிபித்த மாம். (53)

நந்தியாவட்டம்

நேத்திர வாயுகபம் நேத்திரப்புண் வெட்டருகல்
நேத்திரங்க பாலசன்னி நீகவினைக்—கோத்திரங்கள்
மாள நொறுக்குதலால் வாகடர்கைக் கேற்றவச்ர
வாளாஞ்சு யோதனனுர் மாலே. (54)

மருது

ஓயாத நோய்க்கடலே யோடி யுறிஞ்சுதலால்
வீயா தறிவை விளக்குதலாற்—றீயான
மந்திரியைத் தேற்றுதலால் மன்னவனை யாற்றுதலால்
இந்திரன்பா ரென்பதெரி யே. (55)

வாழை

வங்கத்தை யெல்லாம் வனைத்திடலா லுண்டவரை
யங்கத்தைப் பொன்போ லணைத்திடலாற்—றுங்கி
யுரமிகவிந் தைப்பெருக்கி யுண்மை தரலால்
அரமகளைத் தேயுவென லாம். (56)

கற்புளியோகம்

ஆன நிலாவாரை யாதார மாக்குவது
கானநில வாவாரைக் கற்பகமே—தான துகேள்
வேராதி யாவற்றும் வேந்திர மிளகுசுக்கு
காரையிலே கற்புளியோ கம். (57)

வல்லியத்தீரல்

நற்கை வசமா நவலோக முஞ்சூலே
நிற்கக் கயத்தை நிராகரிக்கும்—வற்கமென்ன
சொல்லுவேன் பண்டிதற்குச் சூரச் சிலிமுகமாம்
வல்லியத்தி னீரல் மகிமை. (58)

மான் கோம்பு

சாடுவார் வாகடர்வெண் சாம்பராய்த் தேனுடன்கை
யாடுவார் கண்டா வவிழ்தமாய்—நாடி
யாலேமுதற் கொப்புளத்தை யாச்சியத்திற் காய்ச்சி
யிரலேமருப் பாற்பிணியை யே. (59)

முயலிறைச்சி

சாரத்தைக் காண்பார் சடலத்தை யாதரிப்பார்
வீரத்தை நன்ருய் விளக்குவார்—பூர
வீசையையவிப் பாராயுள் வேதியர்க ளானேர்
சசவிறைச்சி யாற்காரத் தை. (60)

ஆட்டிறைச்சி

போலத் தயிலத்தைப் பொய்யாமல் வைத்தெடுத்து
மேலிற் றடவி விதரணையாப்—பாலிற்
பிறியச்செய் பேர்பல பெந்தமா முந்து
மறியெச்சத் தாலீய் மை. (61)

காசம் நீங்க

தாசே ரகநீரிற் றப்பாம லூறவைத்து
மாச வரைக்குமறு மாசத்திற்—போசனகு
டாரி மிளகோ டயத்தை யரைத்துருட்டிக்
காசமறு நீரிலுண்டக் கால். (62)

எண்குபிச்சு

காடியினி லூறக் கடிப்பகையுஞ் சேர்த்தரைத்துப்
போட ரவியிற் புடம்போல்—வாடியபின்
உண்சுடுநீ ரிற்புனலி லுப்புசங்கா மாலையறும்
எண்கினது பிச்சுவசை யில். (63)

பெரும்பாடு

பட்டையினி லூட்டிப் படிகார மிந்துப்பும்
ஒட்டிரட்டி யாகவரைத் துண்டைசெய்தி—ரட்டைப்
பிரமிரசந் தேனிற் பெரும்பாடு போகும்
வருடையுதி ரத்தைநா வல். (64)

காட்டுப்பசுப்பால்

பேயனைய நோயும் பிரமையுந்தே கத்திளைப்பும்
காயசித்தி யுண்டாகுங் கண்குளிரும்—வாயசதி
போமாப் பெருமைவரும் பொல்லாங்கெ லாமகலும்
ஆமாப்பா லாலே யறும். (65)

குட்டம் 18, கயம்

குட்டம் பதினெட்டுங் குஞ்சரத்தின் றூற்சொரியுங்
கட்டம் பெரிதாங் கயநோயும்—பட்டவுடன்
செந்தீமுன் பஞ்செனவே சிந்திலுப் புடன்கலந்த
தந்தா வளநீர்க்குச் சாம். (66)

கபவாதம்

கட்டு மதையும் கடிப்பகையை யும்பனியின்
வட்டு மரிசனமு மத்தித்து—வட்டத்
துவரை யளவுருட்டித் துய்க்கவை வாதம்போம்
இவுளிநுரை யிந்துப்பை யே. (67)

ஆட்டுப்பால்

மிகவுண்டாங் காயத்தை மேருவெனச் செய்யும்
இகலுண்டா நோய்களுக்கெந் நாளும்—பகுதி
யையிடைச் சகியாமை யாக்குவிக்கு நாடின்
மையிடச் சுதையாலே மைந்து. (68)

மர்க்கடவிந்து

என்னசொல் வேன்முன்னே யிரதத்தைப் பந்திக்குஞ்
சொன்னமுத லானதைச் சூர்ணிக்குந்—தின்னவற்கு
நற்கடத்தைக் காப்பாற்று நாதாக்க ளேயறிவார்
மர்க்கடத்தின் விந்து மகிமை. (69)

பசுவின்பால்

ஐமுகருக் கேதெரியு மைவகையாற் செய்புனிதங்
கைமுறைமெய் வாகடர்க்குங் காணுமே—நைமுறைமெய்
மாவின்ப மெய்த வளர்த்த லதின்பாலே
யாவின் பெருமையை யா. (70)

மான் ஊன்

மான்கறியி னுலக்னி மாந்தமறு மென்றுமுறை
நான்கறிய வேத நவிற்றுகையா—லூன்கொள்
விழைவுடையோ ராலாயுள் வேதியர்சொல் லாலே
யுழையாலே நன்மையடை யும். (71)

உடும்பு ஊன்

திண்மையாங் கல்போற் றிடமா மிடைவலிமை
வண்மையா மிந்திரியம் வாய்க்கவே—புண்மை
படியிற் கழறுமுறை பண்டிதர்க்குத் தோற்றுந்
தடிமெய்த் தடியாற் றடி. (72)

ஆசனரூடிக்குப் புகை

ஆசன ரூடி யதுவே பவுத்திரமாம்
பேசு மதுபறக்கப் பேதிக்கும்—மோசமிலை
வெம்புகைதந் தாற்றணலால் வேம்பின் புறணியுடன்
சம்பு வெனுநரியெச் சம். (73)

விரண—சிகிச்சை (மருந்து)

மாறி விரணங்கள் வற்றி வலியடங்கித்
தேறிக் குணமாகுந் தேகத்தில்—ஊறிரத்தம்
பாய வெளிருட்டின் பாலா லரைத்திட்ட
சீயக் கொடியாலே சீ. (74)

மரைமயிர்

நன்மணிக ளுக்குறவாய் நாளுந் தொழில்காட்டும்
புன்மைகளுண் டானவெல்லாம் போக்குமே—தின்முன்
நரரா னவராவார் நாகரெனச் செய்யும்
மரைரோம மென்னு மயிர். (75)

இதுவுமது

காயசித்தி யுண்டாக்கிக் கைத்தருசி யைப்போக்கி
யாயச மெல்லா மடக்குதலா—லாயுள்விதி
வல்லவரே யாய்ந்து வகுத்தா ரெனக்குறுதி
சொல்லுடலுக் கானதென்று சொல். (76)

ஒட்டகப்பால்

சுக்கிலத்தைத் தம்பித்துச் சோரா துயிர்நிலையைப்
பொக்கு வராமற் புரக்குமே—பக்குவமாய்
ஆசேர் பிணியை யடரா தகற்றியொரு
தாசே ரகக்கிரந் தான். (77)

ஆமாத்தியர்

தெய்வ பரிகாரி செய்முறைபோற் றப்பாது
உய்வ தறிந்த வுபாயமாய்க்—கையவிழ்தம்
நோமாத் திரமோய நுகர்வித் தறிவாரே
யாமாத் தியர்வயித்திய ராம். (78)

சிறுநீர்

மால்மனை களங்காகும் வல்லமையாம் பாஷாண
மேல்வருமு லோகமெல்லாம் வெண்மையாம்—நூல்வலிமை
சொல்லச் சிலாக்கியமாஞ் சோதி மயமாகும்
புல்லச் சிறுநீராற் பொன். (79)

பூனைப்புழுக்கம்

நாள்வளரு மெய்க்கு நலமுண்டா நாடாது
பாள்வறிய நோய்கள் பயமில்லை—யாள்வரிசை
யாற்சால மேன்மை யமைய மிகையுண்டா
மாற்சால பீசத்தால் வாழ்வு. (80)

மயில்மலம்

கங்களங்கா மம்முறையாற் காணலா மெப்பொருளு
மிங்கிதமா யாரு மெளிதிலே—யெங்க
ளுமைத னருளா லுலகி லறிய
ளுமலிமலத் தாலே நா. (81)

நண்டுக் கொழுப்பு

சுன்னமெனச் சொன்னந் துலங்கு மதினாலே
மன்னு பிணிகளெல்லா மாறுமே—மன்னு
பலவன் மையுமடரும் பாரி லுடற்கே
அலவன் கருவாலே யாம். (82)

பரிகாரிகளின் பண்பு

வெந்த பிசிதத்தை வேகாப் பிசிதத்தில்
நுந்துதல்போ லூனை நுகர்வார்க்குச்—செந்துகள்மேல்
கண்ணோட்ட மில்லாக் கதைபோற் பொருளாசை
யெண்ணுபரி காரிகளுக் கில். (83)

கறிகள் வன்மை

மூக்கிரட்டை முன்னை முசுட்டை தவசியிலை
நாக்கிரட்டை யெய்கோல நாகணவா—யாக்குகறி
நான்குமுத லுத்தமமா நாடியது பத்தியமா
மூன்கருதி ரண்டுமமை யும். (84)

பாம்பின் பிச்சு

சேத்துமத்தை வாட்டுமது செய்வதுகே ளப்பொருளை
மாத்திரம்பூ மிக்குளிட்டு மண்ணுக்கிப்—பாத்தி
பொசுங்கு மதில்விளைந்த பூவரசின் கொட்டை
புசங்கத்தின் பிச்சுநமன் போல். (85)

அயக்களங்கு

இரும்பா னதுகளங்க மென்பதினு லாகும்
பெரும்பார் புகழும் பெருமை—திரும்பவுங்கேள்
வேண்டியதெல் லாங்கிடைக்கு மெய்யாக வோதுமுறை
ஆண்டலையண் டக்கருவா லாம். (86)

கந்தக தயிலம்

உண்டாக்குங் கந்தகத்தை யுள்ள படிதயிலம்
பண்டாம் பிணியைப் பரிகரிக்குங்—கண்டமுறை
சொன்னூர் வயித்தியர்க டோற்றமிம் மாத்திரமே
வன்னியிற் கென்ன மகிமை. (87)

கந்தி கட்டு

இல்லாமற் றேவியுர மென்ப துலகத்தி
லுல்லாச மாகி யுலவுமே—சொல்லாண்மைச்
சாத்திரிகள் கைவரிசை தப்பாம லெப்போதும்
போத்தின் சிறையாற் புகை. (88)

வெள்வங்கம் நீர்வாங்க

கண்ணொருவை யுண்ட கரிசலாங் கண்ணிவிரை
வண்ண மாகத்தயிலம் வைத்திறக்கிப்—பண்ணுமுறை
யோண்ட மூசை யுருகையிற்பெய் நீர்வாங்குங்
காரண்டத் தால்வெள்வங் கம். (89)

இரசக் கட்டு

கொப்பரைத்தேங் காய்நெய் கொளுமுதற்குக் கால்வாசி
யொப்ப வருடி யுபாயமாய்—வைப்பக்
கமைகொள் பொடிதூவக் கட்டு மிரதம்
ஞிமிறி னிறகுடனே நீ. (90)

சூதக்கட்டு

சூதத்தைச் சூதாகத் தோழமைபோற் பந்திக்க
வீதத்தை நன்றாய் விளம்புவேன்—சூதந்
தொடிக்குப் பதின்மடங்கு தும்பியத ளுண்ட
கொடிமா றெலும்புநிணங் கொண்டு. (91)

இதுவுமது

தப்பாமற் கட்டவிர தத்தை யொருநொடியி
லிப்பா ரறிய வியம்புவேன்—உப்புவளர்
மேதினியின் பூவுடனே மேவு கருவான
ஓதி முதுகிலமை யும். (92)

இதுவுமது

வங்கமெனு மீயத்தில் மல்கியநீர் பாறவெண்
தங்க மெனவே தயங்குமே—சங்கிலையில்
மேவுரச முந்தொடியும் விட்டரைத்து மத்தித்த
பூவைமுட்டை யின்கருவாற் போம். (93)

இதுவுமது

நீர்வாங்கி வெள்ளை நிறத்தைக் கறுப்பாக்கி
யேர்வாங்கு வெண்பொனு மீயமே—சாரந்
தணிவிம்பக் காயுடனுஞ் சாம்பலாய் வந்த
பிணிவதனத் தின்சிறகாற் பின். (94)

ஆமிரதஞ் சுண்ண மயமா மரிதார
மாமலகச் சாற்றி லரைத்தூட்டித்—தாமுமதி
லாகியபி னேய மதிலெடுத்து மேற்றெறிக்கக்
கோகிலப் பிச்சாலே குரு. (95)

பொன்னு மிருப்புக்கெப் போது மதிகாரம்
பின்னுமுறைமை பிறழாமல்—சொன்னேன்கேள்
வல்லமையா மந்த மருந்தா லுடற்றிரமாஞ்
சில்லையா லுண்டாகுஞ் சீர். (96)

காந்த சுத்தி

அப்பொருளா லாக்கை யழியாது நீடிக்குந்
திப்பிய மாகச் செழிக்குமே—யொப்பிலாப்
பேரிளுற் றிண்மை பெருகும் பெருங்காண
ஆறிளுற் காந்தமமை யும். (97)

சேல்

பன்னு மூலோகமெல்லாம் பற்பமா கத்திறமை
மன்னுங் கருப்ப மடவார்க்குத்—தன்னி
னுதவு மவிழ்த முறையிடமு மாகச்
சிதலையெனப் பேர்புனைந்த சேல். (98)

வங்கநீர்வாங்க

கொண்டுவங்க நீரைக் குறுக்கலா மெப்படியு
மண்டலத் தம்மைசெயும் வாறுகேள்—தொண்டையிலை
யின்மா ரசம்விட் டிழைத்துக் கரியாக்க
வன்மீன் புற வோட்டு மை. (99)

வசளை

கண்டுகொண்டேன் பொல்லாநீர்க் கட்டு முதற்பிணியை
விண்டுவிடச் சாடுமகா மேனியெல்லா—முண்டவர்க்குப்
பைய வுளங்குளிரப் பண்ணு மருந்தான
நையல் வசளையென்று நான். (100)

பெண்ணுமைத்தோல்

ஆனைச் சிரங்குமுத லான ரணநோயை
யூனிற் படாம லொதுக்குமே—மானப்
பிளிறின் குரல்காட்டும் பெண்ணுமை யான
துனியின் புறவோட்டுத் தோல். (101)

குட்டங்கள்தீர

வெண்குட்டஞ் செங்குட்ட மேனித் திரையிவைகள்
கண்கெட்டு நீளக் கழலுமே—யுண்கண்
முயலு மறிவினர்க்கு முட்பலவி னூடே
மயிலை யுறவான மண். (102)

பெற்றுக் கருகருவாய்ப் பேதமிலா நற்பொருள்கள்
உற்ற மருந்துக் குறவாகிப்—பற்று
மினமா யவிழ்த விருப்பா யிருக்குஞ்
கினைமுட்டை யண்டமெனுஞ் சீர். (103)

பட்டையின் பெயர்

உரிபோர்வை மீக்கோ ளுடனே புறணி
தரியூன்பை பச்சை வடந்தட்டை—யுரிய
செதிள் தொக்கு மேற்சருமஞ் செட்டையுடனே
யதளென்ப துந்தோ லுக் காம். (104)

எலும்பின் பெயர்

அங்க முடலாணி யாதார வாதாரி
கங்காள மென்பு கறைகட்டு—மங்காத
புத்தியுள நூலோர் புகலு முறைப்படியே
யத்தி யெலும்பென்றறை. (105)

குருதியின்பெயர்

செம்பால் கறையுதிரஞ் செந்நீர் குருதிரத்தம்
நெம்பான நெய்த்தோர்புண் ணீர்சோரி—பம்பு
முரவையடர் சோணிதத்தி னோடு சுடுவன்
எருவை யிரத்த மிவை. (106)

துத்தநாகம்

சொல்லி முடியாது துத்தநா கம்பொடியாய்
வெல்லத் துரத்தும் வியாதிகளை—நல்ல
வுரனுடைமை யுண்டாக்கு முண்டவரை யென்றுங்
கிருமிமனை மண்மகிமை கேள். (107)

ஆகியநோய் திண்மை யணுகுநிலை யாவாரைச்
சாகரச மிப்பிமுத்து தக்கோலம்—வாகா
யுபதை யுறவமைத்தங் குண்ட வுடனே
பிபிலிகையெச் சத்திலறும் பெய். (108)

அதிமதுரக் கூட்டு

மெத்தவுண்டா மெய்பினுள்ள வேதனையெல் லாமகலுஞ்
சுத்த பவுத்திரமாய்த் தோன்றுமே—பத்தி
அசமதா கஞ்சுக் கதிமதுரங் கூட்டு
மசகத்தே னுலே மதி. (109)

சுன்னமா கப்படிக சோதியா கப்பரிதி
வன்னமா கப்பொருளாய் வாய்க்கவே—பின்னுமுறை
யேநா கமுமஃதே யெய்த வெளிதாகப்
பூநாக முண்டாக்கும் பொன். (110)

தேள்

தன்னுகத் தாலேதுத் தன்னுகம் பந்திக்கும்
மன்னுக வாதத்தை மாட்டுமே—பின்னும்
பெறுபதஞ்சே னுபதிக்குப் பிந்தாம லீயுந்
தெறுபதமா கும்பெரிய தேள். (111)

கமடம்

காயத்தி லேபிறந்த காயத்தைப் போக்கிமிக
மாயத்தைப் போலே மயக்குதலா—லோயா
அமுதவல்லி யுப்புடனே யாக்கி யமையான
கமடமெனு மாமையதி கம். (112)

பன்றிநெய்

வாளியைப்போ லாருநோய் மாவினத்தின் மேலேகீ
நாளு மதனு னய்முண்டாங்—கேளிதனை
மெய்நடுங்கப் பண்ணுநரர் மெய்யிற் குடியிருக்கும்
எய்நிணத்தை நெய்யாக்கி யெய். (113)

கோலக்கூட்டு

தேனிலுரைத் திட்டாற் றினவடங்கும் புண்ணகலு
மூனி லுதிர முரக்குமே—கானுறுமங்
கோல்க் க்னிரசத்திற் கூடமதி யூறவைத்த
கோலத்தின் கானகத்தைக் கொண்டு. (114)

நாகப் பெருமை

என்னவென்று சொல்வே னெதிரானல் வைகறையில்
மன்னவர்கண் டங்கே மகிழ்வார்கள்—பின்னுமகா
வல்லமையுண் டாக வழங்குமே வாகடர்க்கும்
நல்லநா கப்பெருமை நான். (115)

மருத்துப்பு

காணுமுன்னே விட்டுக் கதலுமெய்யைக் காணுயா
லாணவமாய்ப் பின்னு மதிகமா—மூணுறவு
செய்யும் புளியைச் சிநேகிக்கு மெள்ளநள்ளும்
பைபுளெனு நோய்மருத்துப் பை. (116)

கச்சோதம்

வர்க்கமெல்லாங் கட்ட வலிமை யுடைத்தாகும்
பொற்கடம்போற் றேகத்தைப் போஷிக்குன்—தர்க்கமெனப்
பிச்சோதம் போலும் பிணிகளெயெல் லாமறுக்குங்
கச்சோதம் பாஷாணக் கல். (117)

நண்டின்கல்

தன்னைப் பொடிசெய்து சாரச்சாற் றூலரைத்துப்
புன்னைச் செதிள்பொடியும் போட்டரைத்துப்—பின்னுருட்டி
நற்கலிக்க மாக்கியிட நாடாது சந்நிபிணி
கற்கடக மானநண்டின் கல்: (118)

நந்து பற்பம்

மெய்யாள ராக மெலிவிக்குங் காசமறும்
மெய்யா யதனை விளம்புவேன்—பொய்யாது
தந்தி யிலைரசத்தாற் றுவளமாந் தேனினுணில்
நந்துடைய பற்பத்தால் நை. (119)

முத்துச் சுண்ணம்

நீரினுண வாதமறு நெய்யினுண வெம்மையறும்
மோரினுணப் பித்த முரியுமே — சாரணைவேர்
குப்பிநடு வைத்துக் குறியாக வட்டமுறை
இப்பிமுத்துச் சுண்ணத்தை யே. (120)

பாஷாணம்

அடலையாய் மாத்திரையா யாக்கியவம் பாலே
விடலைநிகர் பண்டிதர்கள் வெல்ல — வுடல்வனத்திற்
கொல்வதுபோ லாயுள்மறை கூறுகின்ற பாஷாண
வில்சுரப்பு ளெய்வதற்கு வில். (121)

காமவல்லி

மாறு மருந்தீடு மாறும் பயித்தியம்போம்
ஆறு ரணங்களெல்லா மாறுமே — நீறுகத்
தாமரைநீர் போலுடலிற் றட்டாது நோய்களெல்லாங்
காமவல்லி யென்றுரைத்தக் கால். (122)

காந்திமேய்

தீயாகி யெங்குந் திரியுமதை யாவற்றும்
ஓயாம லெப்படியு முண்டக்காற்—பாயாது
போந்திமிர்வா தங்கிரந்தி புண்ணீர மண்ணவர்க்குக்
காந்திமெய்வா தச்சலுப்பைக் காய். (123)

பற்றறுத்துப் பின்னுமெட்டிப் பாராமற் சாதிக்குங்
குற்ற மிராமற் குறுக்குமே — வெற்றறலி
னுமிடரா லூறி யடர்பிணிக்குங் கூற்றுவனும்
ஏமினிசன் னிப்பிணியை யே. (124)

மேகம்போக

கொன்று விடமனதாய்க் கோபஞ் செயுமுடலை
மென்று விடுமதிக மிஞ்சினு—லென்றைக்குங்
காந்தி தனைப்பெருக்குங் காட்டாது மேகத்தை
யீந்துபிர தானிதனை யே. (125)

நரைதிரை நீங்க

பங்குக் கரைவாசி பாலிட் டதிலவித்துச்
சங்கம் பழக்கனிநீர் சார்பாகப்—பொங்கி
வருமுனெண்ணெ யட்டாடில் வாராநரை யென்றும்
நரைதிரையில் லான்சினையை நால். (126)

நாவல்விரை

வார்த்தெரித்தா லெண்ணெய் வருமதனில் வால்மிளகை
யார்த்துப் பொடிசெய் ததிற்றாவிப்—பார்த்தெரித்து
நேரா மதிமுழுக நீங்கு நரைதிரைகள்
நேரடியா நாவல்வித்தை நீர். (127)

அழிஞ்சில்விரை

இல்லாமல் மத்தித் திரட்டிப்பு நீர்விட்டு
நல்லா யெரிக்கவெண்ணெய் நாடுமே—பல்லசதி
யுங்கா லசதியும்போ முண்ண வதைமாவில்
அங்கோல வித்தையை யம். (128

குசைவேர்க்குடிநீர். குசை—தர்ப்பை

கைகா லெரிவு கசிவுவெயர் வெப்போதும்
வைகா லசிய மடிவாதம்—மைகா
சசதி யிவைநீங்கி யாகவென்ரு லின்பங்
குசைவேர்க் குடிநீர் குடி. (129)

மஞ்சள் வேர்

உண்டவெறிப் பித்த முயர்ந்ததனுற் ரேஷசன்னி
கண்டு மனது கலங்கியே—மண்டையிலும்
பாஞ்சதுமீ னுங்காண் பருகினு லக்கணமே
காஞ்சனிவேர் காய்குசநீர் கள். (130)

காளகண்டமுட்டை. காளகண்டம்—குயில்

ஆகியபா ஷாண மனைத்தும் வசமாகித்
தேகஞ் சுரத்தணலாற் றீஞ்சவர்க்கு—வாகாக
நாளுமிகப் போஷிக்கு நன்மை மிகவுதவுங்
காளகண்ட முட்டையினுற் கல். (131)

பாக்கிய மாக்கும் பலமாக்கும் கெட்டதையும்
யோக்கிய மாக்கு முயர்ப்பிக்கும்—ஆக்கமென்றுந்
தேவென்று நன்மைத் திறமென்றுஞ் சீரென்றும்
மாவென்று வந்த பெருமை. (132)

நாணுவான்—நாகணவாய்ப்புள்

தன்னைப் பெருக்கச் சவீரத்தைக் காண்பிக்கும்
பொன்னைப்போற் றேகத்தைப் போஷிக்கும்—வன்னமிகக்
காணு முறைமைகளைக் காண்பிக்குந் தப்பாது
நாணுவான் முட்டைவா ணாள். (133)

நாகவல்லிக்கூட்டு. நாகவல்லி—வெற்றிலை.

போகு மொருதலைநோய் போகுந் தலையிடிப்பு
போகுங் கபாலவலி போகுமே—நாகவல்லி
யோம மிளகரைத்த வுண்டையெண்ணெ யட்டாடிற்
காமரூ பிக்குரோ கம். (134)

முக்கடுகு குடிநீர்

கறிகாமன் சுக்குடனே காய்ச்சிக் குடிக்கப்
பிறிவான நோய்கள் பிணிகள்—அறுமேல்
வராது வலிமை வருந்தண்மை யுண்டாம்
அரோகிமுத லாஞ்செம்மை யாம். (135)

நோய்களெல்லா மப்பா னுகரப் பசியுண்டாஞ்
சேய்களென்னச் செல்வஞ் செருக்குமே—காய்கிழங்கு
மூணுக்குங் கல்லு மொருநாழி கைக்குளறுங்
கீணேக்கி யாலாகுங் கீழ். (136)

தேகத்தி லுண்டாந் திமிர்கடிநோய் வாதமெல்லாம்
போகக் குருதியுண்டு போக்குதலாற்—றேகஞ்
சுளுவு பெறவினிது தோற்றுவித்த லாலே
நளுவாலுண் டாகு நயம். (137)

பிரமிக்கலவை

மாதர் பொறையுயிர்ப்பால் வந்த நலிசன்னி
யாது மகலு மனுதினமுஞ்—சீதை
பிரமி யிலைரசத்திற் பெந்தமாய்ச் சேர்ந்த
கரமூத்தி ரப்புட்டை கள். (138)

வர்ச்சப்புழுக்கைப்பக்குவத் தயிலம்

பட்டை ரசத்திற் பகலெல்லா மூறவைத்துப்
புட்டுபோ னன்றாய்ப் பொடிசெய்து—சட்டியெரி
யிற்செய் தயில மிறக்கியுண வுப்புசம்போம்
வற்சப் புழுக்கைநா வல். (139)

சிவல் எருக்கூட்டு. சிவல்—கவுதாரி.

குங்குமப் பூவையுந்தக் கோலத் தையுமரைத்துச்
சங்கிலேநீர் விட்டுருட்டித் தண்ணீரில்—நுங்க
முடமாறுங் தேனிலுண மூத்திரநோய் தீரும்
உடனே சிவலெருவை யும். (140)

வேளில்பக்குவம். வேளில்—அணில்.

தன்னி லருதபிணி தானறுமெய் நன்றாகும்
வன்னி யெனப்பசித்தீ வாய்க்குமே—புன்னேத்
தளிர்கறியால் மத்தித்தத் தண்ணீரா லுண்டால்
வெளிலெச்சத் தாலகலு மெய். (141)

பாலேயிலே

வெய்யில் பனிகாற்று மேவாம லோவாது
செய்ய வரிசை சிறத்தலாற்—கையுணர்வாய்
மேலு முறையுளன மேவுதலால் வாய்சிறுத்த
பாலேயிலே யேயவிழ்தம் பண். (142)

முசுட்டை

ஓர்வரிசை நாண்முழுது மூறவைத்த பின்முசுட்டை
நீர்வழியு மப்படியே நீங்கியபின்—மோர்சேர்
கனிவாகி யுப்பஞ்சுங் கட்டவென்றாற் சொன்னேன்
முனிவா யுமிழ்நீரில் முன். (143)

பணிவயிரி மாத்திரை. பணிவயிரி—கருடன்கிழங்கு.

மூலத்தை யுங்கடுகு மூன்றையுமொக் கப்பொடித்துப்
பாலிட் டரைத்துப் பயறுபோ—லேலு
மணிபாம்பு தேள்விடங்கள் மாறவுண மேற்பூசப்
பணிவயிரி யின்பெருமை பார். (144)

பெருநாரை

கற்பமா ளுலுடலேக் காத்திடலாற் காவாளுல்
நற்பெருமை யாவருக்கு நல்குதலாற்—கல்பம்
விதாதா வெனவிருக்க மேற்செயலா னீர்வாழ்
பிதாவே யுயிர்க்குப் பிதா, (145)

முயல்

மீதுவளர் கேசத்தால் வெண்பொடியி னாற்குளிகை
யாதுந் தனதுவச மெய்துமே—யீதுமன்றி
யுண்மேக நோயுடல்விட் டோடுமே நாடோறும்
விண்மேக நீருணியின் மெய். (146)

வெருளிமண்

கொண்டுவந்து வெள்ளாட்டுக் கோமயத்தி லூறவைத்து
ரெண்டுதிர மரைத்து நேர்த்தியா—யுண்டைசெய்து
கோவை யிலைரசத்தாற் கொள்செம்பூ ரக்கடிபோம்
மாவின் னிறைவெருளி மண். (147)

தென்னை, பனை, ஈந்து

தன்னி லதரத் தடிப்பு மிரணமும்போம்
தென்னைபனை யீந்தில்முதற் சேத்துமம்போம்—பின்னதனிற்
காரகம்போம் வாதமறுங் காசமறும் பின்னதனில்
வாரணையால் மேகமறும் வாய். (148)

கீரியெச்சப்பக்குவம்

தெத்த விடறல் திடறலொடு குளறல்
அத்தனையும் போமே யதிமதுரம்—துத்தம்
தகரைரசத் தாலரைத்துத் தானதைத்தே னிற்கொள்
நகுலத்தி னெச்சத்தால் நா. (149)

தாமரை நூல் கூட்டு

மேகமெங்கே வெட்டையெங்கே வெள்ளை கருமையெங்கே
போகுமோர் தாமரைநூல் பூநீறு—பாகமெனச்
சேர்க்குமுத லக்காரந் தின்னப் புளியைவிட்டே
யார்க்குவ தப்பிசினி யால். (150)

கோவை

சத்துருக்க ளைக்கொண்டு சாடாமற் சாடவென்றால்
நித்தியமுந் தின்று நிலைமையாய்—மித்திரனார்
விம்பத்தைப் போலே விளங்கலாங் காய்முதலாம்
விம்பத்தி னாற்பிணியை வெல். (151)

ஆகப் பழகிவந்தா லாகத்து வீக்கமெல்லாம்
போகப் பிரிவு புரியுமே—தேகத்தை
மேவி வளர்நோயும் விட்டோடுங் கட்டோடே
வீவிம்ப பன்னகத்தை மெய். (152)

கரவீரம்

தன்னை யிமைபோலே தற்காத்துக் கொள்வதுமே
யென்னி லதுவே யிசமானும்—பின்னு
முரைசெய்வ தென்னவதே யுயர்நேத் திரமும்
கரவீர மத்தனையுங் கண். (153)

பாகு

காயத்தைப் போஷித்துக் கற்பாந் தரமாக்கி
நேயத்தை நாளு நிறுத்துமே—நோயெய்த்தே
யேகு முறைமெய் யிளைப்பை யகற்றுதலாற்
பாகு செயுஞ்சமத்துப் பார் (154)

கேதகை

பஞ்ச லவணங்கள் பந்திக்கத் தான்முதலா
யெஞ்ச வுடனே யினையடக்கி—மிஞ்சுமண
மாதலினு னஞ்சையுடை யாரையுமுள் ளாக்குதலாற்
கேதகையின் பாக்கியத்தைக் கேள் (155)

மூங்கில்

தாணுவாய்த் தாணுவுக்குத் தாயாய்மா லைக்கடிந்து
காணுமுன்னுப் பத்தனையுங் கட்டியே—பூணுய்
வளரு முயிர்நிலைக்கு வாய்த்த துணையாங்
கிளையென்று வந்தமூங் கில். (156)

தன்னைப் புனிதமெனத் தானுக்கும் பீசத்தாற்
பின்னப் படுத்தாது பேய்ப்புடலும்—பொன்னும்
உவள்வித்து மாங்குடிநீ ரோதுமுத லோடு
கவர்கிருமி போக்கியாக் கை. (157)

போலே யிருந்து புடத்துக் கிடமாகி
மேலே நறுமலர்க்கு வீடாத—லாலே
யசதிதரு தாக மடங்கத் தணிக்குங்
கிசலையங் கற்பங்களுங்கேள். (158)

தாதகி

எப்படியு மேலே யிருடிகள்சித் தாதிகள்சொல்
ஒப்பின் மறைமுறைமை யுண்மையே—தப்பலமெய்
மேதினிமே லேயாயுள் வேதியரா லோதுகிற
தாதகியாற் கட்டுமிர தம். (159)

மூங்கில் வேர்

கையசந்து மேல்மூச்சு காலுப் புசவாதப்
பையுளெலாந் தூரப் பறக்குமே—யையமிலை
வேயி னடிவேரை விட்டரைத்து மோருடனுண்
சாயி னிரதத்தாற் றான். (160)

தேவி யுரமிளகு திப்பிலியும் துப்புநிறை
மேவ வரைத்ததற்கு மேலுருட்டி—யாவினெய்நீர்
ஈதிலுண வெம்மைகப மேகு மடாதுபுளி
மாதவியின் போதிரதம் வார். (161)

கண்ணாகங் கைகால் கனலப் பயித்தியத்தாற்
புண்ணாக வெம்பிப் புலம்புவீர்—தண்ணாகி
வாழவுயிர் வேண்டுதிரேல் வால்மிளகே லங்கலந்த
வேழரச மருந்து வீர். (162)

நோயா லசந்து நுடங்கித் திரிவாருக்
காயாச நீங்கி யழகாகி—யோயாமல்
நைவன மாகாதுடல நாளு மிருக்கவென்றால்
ஐவணமா நேர்த்தியை யா. (163)

வாய்த்த வுடற்குளத்தில் மன்னுங் கொடிகளற
நோய்த்தா மரையை நொறுக்குமே—தேய்த்தவுண்டை
யாகமிள குப்புடனெய் யாலரைத்து நீரிலுணப்
பூகமத கரியைப் போல். (164)

செய்து துரத்தத் தினமு முடற்கழகு
பெய்து நலத்தைப் பெருக்குமே—நெய்கறியை
வீசும் படிகருணை வீதமா யுண்டுவரப்
பூசம் பிணிகளுடன் போர். (165)

நேரிட் டவர்க்கிளைப்பை நீக்கிப் பிணியிபத்தை
வீரிட் டலற விரட்டுமே— சீரிட்ட
வாச மலரின் மணத்தாற் குணத்தோடே
கேசரமென் றோதியம கிழ். (166)

வாதபித்த சேத்தும மாதங்கம் பங்கமுற
மோதி யடித்து முனியுமே—சாதகமாம்
வேகமிக வேயாயுள் வேதியர்க ளாலனுப்பும்
காகதுண்ட மாகியசிங் கம். (167)

கார்ப்பாசம்—பருத்தி

எல்லாந் தணியு மெழிலுண்டாந் தாகமறு
நல்லாய்ப் பசிமே னடக்குமே—சல்லாப
மேற்பாயு மொண்மை விழிக்குண்டா மெந்நாளுங்
கார்ப்பாசத் தாலேநோய் கள். (168)

இலவு

தேறு நோய்களென்னுஞ் சிங்கக் குழாமெல்லா
நீறுகக் கொல்லு நிசமாக—வீறுன
தாரணியிற் பண்டிதவே தண்ட வனத்தில்வளர்
பூரணியா குஞ்சரபப் புள். (169)

துளசி

போலாட்டு.வித்துதிரப் புண்பீ நசப்பிணியை
மேலாட்டு வித்து விளங்குமே—சால
வருந்து முடற்குவெப்பு வாராம லோட்டும்
பிருந்தமைப் பயித்தியத்தைப் பேய். (170)

பனை

மேகவெட்டை சோகை வெறிமுதலா யுள்ளதெல்லாம்
போகவட் டைநல்கிப் புரக்குமே—வாகடர்கள்
உண்ணவரு புற்றுளி யோடே வருபோக்தை
பெண்ணே பனைதாலம் பேர். (171)

முல்லை

போநோ யிபமீறிப் போகாம லேயடக்கித்
தீனமில் லாமற் செழிக்குமே—தேனி
லளவு பெறமீவ ரரைத்துருட்டி யுண்ணத்
தளவமத மாவங்கு சம். (172)

பிரம்பு

வாங்காப் பிடிப்புமுதல் வாயுவையெல் லாமடித்துப்
பாங்கா யருளுவது பார்த்திருந்தும்—நீங்காத
சாத்திரத்தைக் கண்டிருந்துஞ் சாரமுன மோன
வேத்திரத்தை நம்பாமை வீண். (173)

கூவிளம்—வில்வம்

கொண்டமைச்சு தந்திரி கொணர்ந்த கொடுங்கோலைக்
கண்டித்து மெய்யுறுதி காட்டுவார்—பண்டிதர்கள்
பூவுலகி லாயுள்விதி பொய்யா முறையாக்கக்
கூவிளத்தின் செங்கோலைக் கொண்டு. (174)

விளாம்பழம்

மன்னன்முத லாமூவர் மாறுபா டில்லாம
லுன்ன நினைத்த துதவுதலாற்—பன்னிச்
செபித்த வுடலாண்மை சேர்வித் திடலாற்
கபித்தமவிழ் தக்கற்ப கம். (175)

வேப்பம்பட்டைக் குடிநீர்

தொந்தித் தகலாத தோட சுரமகன்று
சிந்தைக் கனுகூலஞ் சேரவென்றால்—வந்தித்துத்
தாபச் சுரமுமறச் சஞ்சலமி லாதருந்து
நீபப் புறணிகுடி நீர். (176)

சிந்துவாரம்—நோச்சில்

நோயார் கலியை நொடிக்கு ளருந்தவெம்மை
யோயாம னாளு முயர்த்துதலுக்—காய
வந்தமுதல் நண்பாகி வாதத்தை யேயுறலாற்
சிந்துவா ரங்கனலுந் தீ. (177)

ஆடாதோடை

வாசத்தி னுடலில் வாசஞ் செயவுயிர்க்கு
நேசத்தை நாளு நிகழ்த்தலாற்—பூசித்த
பேரா தரவு பிறக்க வுளுற்றுதலால்
தாரா யுளைவளர்க்குந் தாய். (178)

பனசம்

மந்திரியை யாதரித்து மற்றவனை யுங்கலந்து
வந்தபொழு தும்மமைச்சை மன்னுமல்—முந்தி
யனசனமா கத்தானே யாக்கைக் கிடலாற்
பனசந் தருமிறைக்குப் பார். (179)

சரவணம்

சீறி யடங்காத சேனு பதியமரில்
ஏறிய போதி லெதிராளி—வேறே
கரவடத்தா லேயவனைக் கட்டி யடக்கச்
சரவணமே நாகபா சம். (180)

குடசப்பால்

காய்ச்சாவெள் ளாட்டுப்பால் கட்டிகட்டி யாகமுன்னே
தோய்ச்சதுபோ லுண்டாற் சுகமுண்டாம்—வாய்ச்சு
விடநற்றே கத்து மெலிவையெல்லாம் போக்குங்
குடசப்பா லான்முரித்துக் கொள். (181)

அல்லி

மூலிகளிற் செய்யு முறைமைகளி லேயதிக
மேலுகையாற் ருக மிலாமையால்—வாலறிவு
முந்துகையாற் றண்மை முதிருகையான் மற்றதினுஞ்
சந்திர மைத்திரிசீ சம். (182)

நாகம்

மானிடர்க்கு மண்ணில் வளருநவ லோகத்திற்
பானு வெனச்சிலது பந்திக்கத்—தானுறுதி
யாகுதலா னன்மை யணுகலுடற் காக்குதலால்
நாகமது வேவாழு நாள். (183)

நெல்லி

அமைச்சனெனு மந்திரியை யாளாக்கிக் கொண்டு
கமைப்பை யுயிர்நிலைக்குக் காட்டி—யமைப்புடைமை
நேம மிகநெய் நிறுத்திவைக்கு மென்ஞான்றும்
ஆமலக நெல்லியை யா. (184)

குளவி—காட்டுமல்லிகை

பாரி னெடுநாள் பழகித் திரியவென்றால்
காரிகையா ரின்பநலங் காணவென்றால்—நேரே
உளவுறுதி மேலுமிக வுண்டாக வென்றால்
குளவி தனைநிசமாய்க் கொள். (185)

இறுங்கு—சோளம்

மன்னவனெந் நாளு மகிழ வரசுரிமை
என்னி லிசைவா யிசைக்கின்றேன்—வன்மை
யுறுங்கன மாக்கைக் குறுதியா மெய்மை
யிறுங்குமா வேயுரமா யெண். (186)

ஏருழுதல்

எல்லா வுயிர்களுக்கு மின்பமிக வுண்டாக
வல்லாண்மை பைங்கூழ்க்கு வாய்க்கவே—யில்லாமை
செல்ல மகிழ்ந்து செனங்கள் சுகமெய்தச்
செல்லுலகி லேருழுஞ் சீர் (187)

நிம்பம்

கைத்தாலும் பின்னலக் காரம்போ லேருகித்துப்
பித்தா யவிடதத்தைப் பின்னிட்டு—வைத்தமகா
விம்ப மருவினவர் மேனிக் களித்திடலால்
நிம்ப முயிர்நிலைக்கு நேர். (188)

குலுத்தம்—கொள்

என்றுரைக்கும் பேர்புனையு மேந்தலுக்கு நண்பாகு
மொன்றான தந்திரியை யோட்டும்—வென்றி
பலுக்கு முயிர்நிலையைப் பாராட்டுங் காணங்
குலுத்தம் பரியசனங் கொண்டு. (189)

ஆடகி—துவரை

என்ன வுலகி லிருக்கும் பிடகரெல்லாம்
பன்ன முதலரசின் பாலாகிப்—புன்னலியை
யோட விரட்டி யுயருநெடு மால்பதியாம்
ஆடகியின் பேர் துவரை யாம். (190)

சூரம்—கடலை

வேந்துமுதல் மூவருக்கும் வீதத் தொடர்பாகிச்
சாந்தமுமாய் வெப்பமுமாய்ச் சட்டகத்தை—யேந்திவரு
வீரம் புலியுடனும் மேலிட் டதைவென்ற
சூரங் கடலையென்று சொல். (191)

சுரபுன்னை

தேக நலியத் தினமு நலிவுண்டாய்
ஆக நலியு மறிவில்லாய்—நீகேள்
குழையை வசம்பிந்திற் கூட்டி யயில
வழையை யனுசரித்து வாழ். (192)

மலடுநீங்க

மலட ரிவரென்று வையகத்தா ரேசார்
பலரு முமையினிது பார்ப்பார்—குலவுபிசின்
மாதப் புருவெச்சம் வால்மிளகொ டுண்டுவரச்
சூதத்தா லுண்டாகுஞ் சூல் (193)

கஞ்சா

நிட்டை யுடையார் நிகழ்த்தியசொல் கேட்டுமிகு
சட்டை யகத்தியநெஞ் சத்திற்கு—வட்டமுறை
யார வமுதா யயிலவரு கற்பமெனக்
கோரகையி னுலடங்குங்கூன். (194)

ஆம்பல்மணக்கலவை

தாகமெனும் வெய்ய தபன பயித்தியமா
ரோகமுதல் குங்குமகோ ரோசனைகள்—பாகம்
அமையப் பொடித்தபொடி யப்பியதை மோந்தாற்
குமுதமல ராலொதுங் கும். (195)

வராகபட்சணி

பசித்தீ பனமிகுந்து பண்ணிடமெப் போதும்
பொசித்தா தரமதிக போகம்—வசித்துமலை
நோராக வேணுமென்று னீகே ளுணவாக
வாராக பட்சணியை வை. (196)

பாளிதம்

விட்டகலுந் திண்மை விளங்கு மதுமேகக்
கட்டகலுங் கட்டங் கழலுமே—சட்டகமு
நீடு நரையாது நீடுழி வாழ்ந்திருப்பாய்
பாளிதத்தாற் பித்தசோ பை. (197)

திலம்

திட்டாந் தரமனிதர் தேக வுதிரமுண்ணப்
பட்டசிந்தா மூடுமெண்ணெய் பட்டாவி—விட்டு
நிலமீ திறத்தலறி நீயதைத்தொ டாதே
திலநன்மைக் காட்டுக்குத் தீ. (198)

மாடம்—உளுந்து

ஓஞ்ச நடையினரா யுள்ளாவி யற்றிடல்போற்
சாஞ்ச வுடனேய்ச் சனரெல்லாங்—காய்ஞ்சநெய்யிற்
கூடத் தனையட்டுக் கொள்ளப் பதமான
மாடத்தாற் றிண்மையா வார். (199)

கடலை, நெய், சர்க்கரைக்கலவை

உடலுக் கதிக முணர்வுக்கு மெய்மை
வடிவுக்குக் காந்தி வரிசை—படியாகி
யெக்காலுஞ் சூர மிழுது மருவநுகர்
அக்காரத் தால்வலிமை யாம். (200)

பசுவின் பால்

காயும் பயித்தியவாங் காரத்தை முன்னடக்கி
யோயு முடலை யொடுங்காமற்—காய
விதையை யகற்றிநல மீட்டுதலா லாவின்
சுதையா லுண் டாகும் சுகம். (201)

அளை—வெண்ணெய்

மேனேக்கிச் சீரணத்தை மேவா தடக்கிமெலி
யூனுக்கி யாவி யொடுக்கவந்த—வீன
இளைபித்த சேட்டை யெனவருநோ யெல்லாம்
அளையினுற் றீருமை யல். (202)

கறிக்கூட்டு

கற்பம் பொசித்துமகா காயசித்தி பண்ணவருஞ்
சொற்பமெங்க ளாக்கையென்று தோத்திரிப்பார்—பற்ப
முழுதுமத லாதுகறி மோதகமே தேனும்
இழுது பொசித்தவரை யே. (203)

புலிச்சளி

காமனெனத் தேகத்தைக் காமே சுரமாக
நோமெலிவை யெல்லா நொறுக்கியே—தீமை
யலுக்கக் கருவாகி யாதார மாகும்
புலிச்சளிநோ யோடுசெயும் போர். (204)

அயினி

ஆதார மாகி யறிவுக் கறிவாகிச்
சேதார மில்லாமற் றேகத்தைப்—போதை
செயினு மமுதாகத் தேற்றுதலா லாவி
யயினிவடி வேபுவனே யாம். (205)

நவநீதம்

கொல்லாமற் கொல்லவந்த குன்மகய பித்தமெனும்
பொல்லா வியாதிப் புலிக்கெல்லாம்—நல்ல
சுவையா யழியாத துப்பினில்வே றூன
நவநீத மென்பதுசெங் நாய். (206)

அபூபம்

எப்போது நன்மை யினங்கட் கினமாகி
யப்போது தண்மை யளித்தலால்—வெப்பைத்
தபாது துரந்துயிரைத் தாங்குதலி னாலே
அபூப மூர்ப்பபறவை யால். (207)

தக்கிரம் = மோர்

எந்தவித மானாலு மெய்துவித்துப் போசனத்தைச்
சிந்தை மகிழச் செரிப்பித்து—முந்துடலைப்
பக்குவமாய்க் காத்துப் பசியை மிகுவித்துத்
தக்கிரம்போக் கும்பித்தத் தை. (208)

பண்ணியம்

பசிப்புக் கிடமாகப் பண்ணியபோ தெல்லாம்
பொசிப்புக் கிடமாகப் போற்றி—முசிப்பகலத்
திண்ணியவாய் நாளுஞ் செழிக்க முறைதரலாற்
பண்ணியமே தேககற் பம். (209)

பானகம்

புன்பிணியா கும்பகையைப் போராடி வென்றவயர்
வென்ப தொழிய விளைப்பாறித்—தன்பவண
மான வுடலி லனுதினமு மாந்துருசிப்
பானகநன் மைக்கிருக்கப் பாய். (210)

கருணை

போசனத்தின் பூணுகிப் போசனித்த பேர்க்குமகா
ராச வுபசார நல்குதலாற்—பேசு
தரணிமிசைப் பண்டிதர்க டாமறியச் சொன்னேன்
கருணை சவுக்கியத்தின் கண். (211)

உணவு

ஆணே றுடலுக் கநுதினமு மன்பாக
வூணே பெரிதென் றுரைத்திடலாற்—காணு
யணவுமுயிருக் கனுகரண மான
வுணவுவுர னுகமமை யும். (212)

திலம்

திலத்தினது சம்பந்தந் தீதே யெனினுஞ்
சலத்தினது துர்க்குணத்தைச் சாடி—நலத்தை
யுலாவ வுயிர்நிலைக்கே யுண்டாக் குதலான்
மலாவக மாதரார்வ லிமை. (213)

அரி

தீதான பித்தத்தைச் சேர்ந்தபொரு ளென்பதனை
யாதார மாக வறிந்திருந்தும்—ஆதே
நணுமுறைமை யெல்லார்க்கு நண்ணுதலி னாலே
உணுமரிபா ரோர்க்குமுறை யூழ். (214)

தேன்

அனுபான மாய்ப்பி னவிழ்தமுமாய்த் தோன்றிக்
கனமான தேகநிலை காட்டிப்—பினுமே
யரசன்முதன் மூவரையு மாட்டுவித்த லாலே
பிரசத்தி னற்போம் பிணி. (215)

சாதிநலம்

ஈன்றவர்க்கு மொவ்வா விழிவென்று முன்னாவிற்
சான்றவரே கூறுதலாற் றப்பாம—லூன்றணிய
நீதியமு தானலு நீசப் படிவருணச்
சாதிநல மாகாது தள். (216)

கூஷ்பாண்டம்

தின்னுரிசை யாலே சிலராசை வைத்துழல்வார்
பின்னமுற நோயைப் பெரிதாக்குந்—தின்னுடலைத்
தீழ்ப்பாக்கு நன்மருந்தைத் தீதாக்கு மாதலினூற் (217)
கூழ்ப்பாண்ட மேதவிட்டுக் கூழ்.

உறைக்கனி

போன வியாதிகளைப் போற்றி யழைப்பிக்கும்
ஊனை வளர்க்கு முபாதிக்கே—யான
திறத்தா லுனக்குரிசை தின்னமுதா னாலும்
உறைக்கனியின் பண்புதனை யோர். (218

படலிகை

பத்தியத்துக் கானதொரு பண்டமா யுண்டவர்க்கு
நித்தியத்தைத் தானே நிறுத்தலாற்—சித்தி
வடிவுறலா வின்பம் வருதலினாற் சொன்னேன்
படலிகையா விக்குநிதிப் பை. (219)

வங்கம் = கத்தரிப் பிஞ்சு

வாதபித்த சேத்துமத்தின் வர்க்கமாய் நற்கறியா
யாதரவாய் மெய்யை யடைதலா—லாதாரத்
தங்கமென வாயுள்வே தத்தரெல்லா ரும்புகன்றார்
வங்கமுயிர்க் காடககருவை. (220)

உடை-வேல்

தந்த வலியசைவு சன்னி யெயிறுகட்ட
லெந்த வலியு மிரியவே—சொந்த
முடைய மருத்துவரே யோதினர் நீதி
யுடையின் பெருமையைநீ யுள். (221)

வலம்புரி

கேட்ட வுடனேயின கேளோ டகன்றோடுந்
தாட்டீக மெல்லாந் தவிடாகி—மீட்டு
நலம்புரிமெய் யாமிடத்தை நண்ணுதலில் லாமல்
வலம்புரியென் றேதீர்நா மம். (222)

கதலி

சன்னிமுத லைக்கலிக்கச் சாரத்தா லேயகற்றிப்
பின்னு மெரியைப் பிரித்தோட்டி—வன்னி
முதலெனமெய்க் கேவலிமை முன்னுக் குதலாற்
கதலிநலிப் புள்ளினுக்குக் கல். (223)

பூத்தோடுக்குநார்

தெய்வீக மாகமணஞ் சேர வருபொழுதி
னுய்வித மாக வுறுதியாய்ச்—செய்கை
தனையின்பப் பாற்படுத்திச் சந்ததமுங் காட்ட
நனையின்பப் பூத்தொடுக்கு நார். (224)

பாவிரி

கொற்றவனை மாட்டிக் குணத்தைப் பிறிதாக்கி
மற்றவனை யும்பழித்து மற்றதனைத்—தற்றுணையாய்
மேவிவரச் செய்திடலால் மேதினியி லேயுரிய
பாவிரியி லேயறிநுட் பம். (225)

சைவலம்

கொள்ளும் பலநோயும் கொண்டு குணங்களெல்லாம்
விள்ளு மறிவை வெளியாக்கும்—கொள்ளுமின்பங்
கைவசமா கப்பரிவு காட்டு மகாமூலி
சைவலமென் றேதுமுனச் சம். (226)

உற்பலம்

நோயி லலைந்தபின்பு நொந்த வுடறேற
நேய வவிழ்த நிலவுதல்போ—லாயாசத்
துர்ப்பலத்தைச் சேருடற்குத் துர்ப்பலமே லாமாறி
யுற்பலத்தா லின்பநிறை யும். (227)

மரிசம்

திரிமூர்த் திகளிற் றிடமாக முன்னே
யறிமூர்த்தி போலுவமை யாக—முறைமை
தருமுற் றிரிகடுகிற் றுனேமுன் னுகும்
மரிசந் தனையாக மம். (228)

வாதத் தையுமதனல் வந்தமைந்த வெம்மையையுஞ்
சீதத் தையுமுறிவு செய்திடலால்—ஓது
வழக்கா யுலகிலெரி வண்மை யெனினும்
அழற்காயை விட்டவர் யார். (229)

முன்னுரைக்குஞ் சன்னி முரணடங்கச் சாடிமடி
தன்னை யடிக்கத் தணலாகிப்—பன்னுகறி
தங்குமன மாகிச் சாதகமா யாளுமென்று
இங்கு மகிமைமுறை யில். (230)

கந்தம்

நோய்மூலக் கோடை நொறுங்க வுடனிலத்திற்
பாயு நலமாம் பயிர்தழைக்கத்—தோயகுணந்
தீர்ந்து வளமை தழைக்க நலம்பெய்யுங்
கந்தமென வந்ததொரு கார். (231)

விறகு

எக்கியத்தி லும்புதிய யாகத்தி லும்மகஞ்செய்
முக்கியத் திலுமணஞ்செய் மூன்றிலும்—தொக்கவிழ்த
உந்திடத்தும் லோக முருகிடத்து மூளுதலால்
இந்தனந்தென் கீழிறைமெய் யில். (232)

சிவை

பீடமா மாடப் பெருமையாம் பின்னுமகா
கூடமாங் கூடக் கொலுவுமாம்—நாடு
பவ்னமா மாடரங்காம் பள்ளியறை யாகுஞ்
சிவையவிழ்த லோகமிவை சேர். (233)

கஞ்சி

அங்கியாம் பித்த வனலை யவிப்பதற்குக்
கங்கையாம் பின்னுங் கதவாகும்—பங்கமுறச்
சூழுமொரு வாயுச் சுழலுக் கனுதினமு
மோழை வினைத்தாதுக்கு மூள். (234)

நெற்றிக்கண்—நெருப்பு

எக்கா லு மவிய யின்று மதனைவென்று
புக்காரை நல்ல பொருளாக்கி—மிக்குணவும்
ஆமுறையா ஞளு மடுக்களைப்பாங் காதலினற்
காமரமா டேறிநுதற் கண். (235)

நீறு

நீரைவச மாக்குதலால் நின்மலமாய்த் தோன்றுதலால்
ஆரு மதுகடைசி யாதலினல்—வீரம்
உடைமையான் மெய்மையா மொண்மேன்மை யாலே
யடலை யரனுருவே யாம். (236)

மெய்

சஞ்சலமில் லாதறிவு தன்வசமுண் டாகுதலான்
நெஞ்ச மியக்கி நிலைத்திடலா—லஞ்சமனு
நீத வொருமை நிகழலால் நீக்கமென்னும்
வீதவத்துக் கானதுணை மெய். (237)

இருந்தை

ஆகு முலோக மவிழ்தங் குடிநீர் தூள்
பாக முதலாகப் பண்டிதர்க்கு—வாகாய்ப்
பொருந்துவிப்ப தானநெருப் புக்கமை தியாலே
இருந்தை யெரிவா யிறை. (238)

எழுநா

தழைத்து வளர்ந்ததிக சாகைகளுண் டாகிச்
செழித்தபிற குண்டாகுஞ் சீரால்—கொழுத்துத்
துலங்கு மெழுநாவிற் றேன்று முருவப்
புலிங்க மதுமுளரிப் பூ. (239)

கழற்சிக்காய்

கோசஞ் சுருங்கக் குடிலமிகு மன்னவனல்
வீசஞ் சுருங்காது மேலிட்ட—மோசம்
ஒழிய மருந்தாகி யொத்தாசை செய்யுங்
கழலா கியகழற்சிக் காய். (240)

போலறுத்து நாட்டப் புலனுக் கிசைவாகி
ஞால மதிக்க நடத்துமே—மேலுளபுத்
தேள்வலிமை யென்று தெரிவித்துத் தெய்வீக
வாளகம் மிருளையரி வாள். (241)

குழை

வன்மையென் றெல்லாரு மயங்காம வீரமுண்டு
மென்மையென்று நன்மை விளம்பவே—தன்மை
தழையவுறு கமலந் தாபரித்த லாலே
குழையா லினிதுபெரு கும். (242)

ஈயம்

அத்தூளி னலே யகலும் பிணிகளெல்லாம்
பத்தியங்க ளொன்றுலும் பாழின்றி—நித்தியமு
மந்திரிபோற் றேனில் வனத்திலுண் மண்டலத்திற்
சுந்தரியா லாமீயந் தூள். (243)

காசத்தைப் போக்கிக் கபத்தை வழிப்படுத்தி
ராசற்குத் தன்னரசு நல்குதலான்—மாசற்ற
போது மதனைப் புறப்படுத்தித் தானுறலாற்
சீதையொளி வேநேத்தி ரம். (244)

வாருதிக்குப் பூஷணமாய் மன்னவனுக் காதரவாய்ச்
சாருகினு மன்னனுக்கே சத்துருவாஞ்—சேரவரு
சாயல்வகை யந்தாதி சத்துவத்தையே காட்டுங்
காயலில வணச்சா கை. (245)

ஐந்துப்பு

காவா புலவுபரி காரிகளுக் காதரவாம்
நாவா புரையை நடத்தவே—பாவகமா
நூல்வா யவிழ்த நுகல்வார்க் கினிதுகட்டுப்
தோல்வாய்நீ ரானுப்பஞ் சும். (246)

உண்டா லுடல்வலிமை யுண்டா மறுதாது
முண்டா மறிவு முடுக்காகும்—பண்டு
பணுமுறைமை கையறிந்த பண்டிதர்க ளாலே
புணரியற லானீரும் பொன். (247)

மங்கலர்

கேசத்தைக் கண்டித்துக் கிட்டச் சுகமியற்றி
மோச வமைச்சை முடுக்கியே—நேசத்தைத்
தங்கவுயிர் நிலைக்குத் தாபித் திடலாலே
மங்கலரோ திக்கிகலா வார். (248)

கள்ள மடையார் கருத்தைப்போ லீசனனி
யுள்ள படிபோ லுணுமவிழ்த—வள்ளலெனப்
பால்வெள்ளை சுவேதமுதல் பாரதிமெய் சுக்கிலமெய்
வால்தவளம் பாண்டு வெண்மை. (249)

தன்னை யெவரறிவார் சர்ப்பனைசெய் யுஞ்சலநோய்
சன்னிமுதல் நாசிவழிச் சாடியே—பின்னு
முதுநோயை யுஞ்சலமாய் மூக்காற் கழற்றும்
மதுபீசத் தூளினுண் மை. (250)

நேயம்

ஆகி யிருந்து மவற்கே பகையாகி
வேகமிகு தந்திரியை வேறுக்கி—யோகைமிகப்
பொங்க வமைச்சனுக்குப் புந்திமகி ழத்துணைசெய்
அங்கி யரசற்குநே யம். (251)

இல்லம்

வேற்றுமைகள் செய்திடல்போல் வேந்துமுதல் மூவரையுந்
தேற்று மிதுங்சம்பார் திட்டாந்தம்—போற்றுணிமை
சொல்லு மருத்துவர்கள் சோதனை நூ லாதிமுறை
இல்லமண் மயக்கமுறை யில். (252)

மாத்திரையாய் நோயினத்தை மாட்டி யுயிர்நிலைக்குப்
பாத்திரமா யாதரிக்கும் பண்டிதரே—நேர்த்தியதைச்
சொல்தேரான் வேறே சுருதி முறைபிடுமே
வில்வலியை நீரறிகு வீர். (253)

மல்லி

சேனுபதி யமைச்சர் சேவிக்க நன்முறைமை
யானு திடலா லனுதினமு—மூனிலையை
நல்லவலி யுடைத்தாய் நாட்டுதலா னுட்டில்வளர்
மல்லி யரசனுடை மை. (254)

ஆதிபரை காளி யரிவண்ண மிப்படியென்
ளுேதி யுலகிற் குணர்த்துதல்போ—னீதிமுறை
யைநீனில மியம்ப லாகியகா ளிங்கமணி
மைநீல் கறுப்புகரு மை. (255)

அசமதாகம்

நாய்முசலைப் பற்றுதல்போ னுடுமுன்னே சேத்துமத்தைப்
போய்மடிக்கு நோயைப் பொடியாக்குங்—காயம்
நிசமதா கப்படிமே னீடித்து நிற்க
அசமதாகங் குளிர்மை யை. (256)

திரிபுரை

ஏரண்ட நேயத்தி லிட்டெரித்துண் டாலுமன்றி
வேருண்டை யாக்கி விழுங்கிடினும்—நேர
யரசு மமைச்சு மடிபற்றி நிற்கத்
திரிபுரைசேட் பப்பிணிக்குத் தீ. (257)

காஞ்சிரக்குளிகை

பிடிப்பு விடவாதப் பேய்நலிவு செய்யும்
மடிப்பு வினையெவையு மாட்டி—யுடற்கதிக
மாஞ்சிலது சித்திகளும் வாய்க்கப் பரவுதலாற்
காஞ்சிரமா காச குளிகை. (258)

ஈண்டுச் சனங்க ளிட்மு மலக்காங்கை
தீண்டுவம்மை யாநோய் செழிக்குமே—கூண்டு
உடலாகத் தூர்ப்பலமா முற்றபிணி யோர்க்குக்
குடவாச மாகாது கொள். (259)

வெண்குட்டம்

மூன்று மொருநிறையாய் முட்காய்வே ளைச்சாற்றி
ஆன்ற வரைத்ததனை யுண்டைசெய்து—தேனில்
விடாம லொரு மண்டலமுண் வெண்குட்ட மாறுங்
குடாவடியெச் சங்கடுகு கொள். (260)

சூரணம்பற் பங்கிருதந் தூளெண்ணெய் லேகமுதற்
பேர ணவிழ்தவெகு பேதங்கள்—நேரறிந்து
பாரி லினியவனு பானங் களினுநிதஞ்
சீரை தனிலறிந்து தின். (261)

மச்சிட்ட மேற்கட்டு மாளிகையே யானுலு
முச்சிட்ட மாயிருக்கு முல்லாபர்—மெச்சு
வதான பரியங்கம் வைக வழகாக
விதானத்தைக் கட்டுவது மேல். (262)

முத்தோடமற

தகிவே ரிவை மூன்றுந் தானோர் நிறையாய்
மகிழிலைநீ ராலரைத்து மாத்திரை—மிகவுருட்டித்
தேமோ ரறலினுணச் சேட்பபித்த வாதமறும்
தாமாலங் கத்தூரி தா. (263)

விளவே ரரிதகித்தோல் வேலம் பிசினி
யுளவோர் நிறையரைத்த வுண்டை—குளநெய்
அமரியினுண் வாதபித்த மையிவைபோ மெய்யே
குமரி யிரதத்திற் கூ. (264)

கொஞ்சிக் கனிரசத்திற் கூசாம லூறவைத்தே
யஞ்சுநா ளாகியபின் பிளநீ—ரிஞ்சியிதிற்
காச மிருமல் கயநோ யகல வென்றூற்
கோசிகமூ லத்தையுணுங் கோள். (265)

நிறைக்கு நிறைமிளகு நேர்வாளங் கொட்டை
முறைக்கனிநீ ராலரைத்த வுண்டை—யறற்குள்
பருக வுளைப்பறுநீர்ப் பாடறுமுண் பாலால்
வெருகுகண்டு தீயது வேர். (266)

தன்னையவித் தக்காரஞ் சாதிக்காய் சாபத்திரி
துன்னக் கலந்துருட்டித் துய்க்கவே—யென்னபல
மூள்வதுகாமேசுரமா முன்சுக்கிலத் தம்பனமாம்
வேள்மனை முதுபூமி வேர். (267)

தூளைத் திலநேயஞ் சூழ நெருப்பாற்சுட்
டாளப் படும்புண்க ளாறவே—நீளத்தி
லிட்டதன் மேலப்பி யிடுமுன் குணமாகும்
பட்டதின் பட்டையினுற் பண். (268)

பந்தத்தை நீக்கிப் பழமலத்னதப் போக்குதலாற்
சந்திப் பருப்பும் கடுக்காயும்—வெந்த
பயநிதமு மாறுமற் பானிக்க வாரம்
அயன்மனையார் காயசித்தி யாம். (269)

சேர்வாபு மாதருக்குத் தீர்ந்து வலிமைமிகும்
பார்மீ தருக்கப் பழுப்புநீர்—ஆரத்
தடிப்புறவூ றிப்புலர்ந்து சார்பு கறிக்கான
கடிப்பகையொ ன் ருற்சூத கம். (270)

தன்னை யெழுப்பிடுபித் தப்பிணிக ளைத்தீர்க்கும்
பின்னும் பசியைப் பெருக்குமே—பன்னமுதல்
நிச்சயமா கப்புளிபுன் னேர்கறியா ணத்தருந்தும்
அச்சமச்ச மாகியப யம். (271)

மூன்று மொருநிறைமேல் முக்கடுகு முக்கழஞ்சும்
ஆன்ற னறலா லரைத்துருட்டி—யூன்றன்
கறுப்புக்கும் வெண்மைக்கும் காடிவெண் ணெய்யுண்போம்
வெறிப்பகைநிம் பந்தகரை வேர். (272)

பால்

எய்த்தவுடல் பருக்க வெப்போதும் பாலுதவி
மெய்த்தனுவி லேமுதுமை மேவாம—லுய்த்த
லுதவுதலாற் சுக்கிலத்தை யோம்புதலி னுலே
அதவு மனிதருக்கே யாய். (273)

வாயுபோம் பேச்சு வதறல்போங் துன்மேகத்
தேயுபோங் காயத் திமிரும்போ—மோய
விடாதறலி னூடந்த வேரைமத் தித்துண்ணக்
கடாசலகண் டிக்கழுத்த கை. (274)

வாள்போ லறுக்குமந்த வாதத்தோ டைகலந்தாற்
றேள்போற் கடுக்குந் றிமிராகு—மீள
வுடலையத னுலிருந் துப்புடனே யுண்டாற்
கொடிவேலி வாதத்தைக் கூர். (275)

கிளர்ந்த வைத்தியர் சொற் கேட்டுடலிற் காமம்
வளர்ந்தமட வார்மயக்க மாற்றி—யுளந்திடற
லாஞ்சுவாசச்செல வகற்றி இருப்பார்மெய்
காஞ்சுகமா மோடுநலி கள். (276)

ஆமயிலே யிற்பாய்ச்சி யாட்டியதில் கடுகு
மோமமு மத்தித் துருட்டியே—சீமுகுமெய்
நீளிரண குட்டமெல்லா நெய்யிலிட மேலாறுங்
காளகண்ட முட்டைகலி கை. (277)

பனசக்கோட்டை லேகியம்

சட்டகத்தை வச்சிரவே தண்டமாக் கும்பனசக்
கொட்டையைநெய் யிற்பொரித்துக் கொண்டதிலே—வட்டுகறி
நேர்கணேகோத் துண்புளியை நீக்குநெய்பா லாமறுபெண்
சூர்பிணி வியாதிநலி சூழ். (278)

பட்டையொரு நாலும் பலமோர் வகைக்காகி
யிட்டிடு மேரண்டத்தயிலத் தேற்றியே—யட்டு
நசியமிடப் பீநசம்போ நாட்டவலி நீங்குஞ்
சசியோம மஞ்சள் பிருந்தம். (279)

முடக்குவாதம்

தன்னரிசி நாலுஞ் சமமாக வெட்பாலைப்
பன்னரசத் தாலரைத்துப் பண்ணுருண்டை—தின்ன
முடமகலு நீருட்னே மோருடன்போம் பித்தம்
வெடியரக்கு குங்குமப்பூ வேய். (280)

காய்கறியாய்ப் பூவின் கறியா யிலைக்கறியாய்
வாய்க்குமதன் புறணிவேர் வாய்க்குமே—நோய்க்கு
விவரமிகவாதலினல் மேதினிமேற் சொன்னேன்
தவசி மணிதருக்குத் தாய். (281)

மாருத வெய்ய வலுநோயினுக்கு வெண்ணெய்
நீருக மூலிகையாய் நேரிட்டு—வீறுகின்ற
வாசனையி லிந்த மகிதலத்தி லேயதிகந்
தூசனைகா லிற்பொடித்த தூள். (282)

அக்குமணி பற்பம்

தேனிலுணப் பாண்டுவறுந் தீருமிள நீரிலுண
வூனில் விடக்கடிக ளுள்ளவெல்லாந்—தானறுமே
விக்கலெலு மிச்சிலுண வெப்பமறு நீரிலுண
அக்கு மணியடலை யால். (283)

உங்கள் வியாபாரம் விருத்தியடைய

"தமிழ் மருத்துவப் பொழில்"

திங்கள் வெளியீட்டில் விளம்பரம் செய்யுங்கள். இது இந்தியா பூராவும், சிறப்பாகத் தென்னாட்டிலும், மற்றும் ஸிலோன், பர்மா, ஆப்பிரிக்கா, மலாயா முதலான தேசங்களிலும் வசிக்கும் சித்த, ஆயுள்வேத வைத்தியர்களால் ஆதரிக்கப்பெற்று வருகிறது. ஆகவே, இப்பொழிலில் விளம்பரம் செய்வது உங்கள் வியாபார விருத்திக்கு மிகவும் அவசியமென்பது துணிபு. ஒரு முறை பாருங்கள்.

விளம்பரக் கட்டணம்.

ஒரு பக்கத்திற்கு 1 மாதத்திற்கு		ரூ.	5	0	0
அரைப் பக்கத்திற்கு	,,	ரூ.	3	0	0
கால் பக்கத்திற்கு	,,	ரூ.	1	12	0

மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

காரியக்கமிட்டியார் :—

"தமிழ் மருத்துவப் பொழில்"

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை,

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed at the Kesari Printing Works, Mount Road, Madras and Published by Dr. V. N. Sama Rao, L.I.M. at "Hyde Park", Poonamallee High Road, Kilpauk, Madras.